# போகரின் அறிவியல் சிந்தனைகள்

65

அ. சப்னா பர்வீன் & முனைவர் த.நாகம்மாள் (SS) [2]

[1] முதுகலை இரண்டாமாண்டு தமிழ் , [2] உதவிப்பேராசிரியர்,

தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,

கோயம்புத்தூர் -043

19764naga@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

சித்தர்களுள் குறிப்பிடத்தகுந்தவர் போகர் சித்தர். அவரின் கண்டுபிடிப்புகள் பற்றியும் இன்றைக்கு அனைவரும் அறிய வேண்டும் என்னும் கருத்தின் அடிப்படையில் கட்டுரை அமைக்கப்படுகிறது. பீங்கான், கண்ணாடி, கூண்டு வித்தை என்பன போன்றவற்றையும் பல உபகரணங்களையும் அறிவியல் படைப்புகளையும் உலகிற்குத் தந்தவர் போகர். அதில் மிகவும் சிறப்பு வாய்ந்தவை குடை வித்தை, கெந்தர்வ வித்தை, வான் ரதம், மரக் கப்பல் என்பனவாகும். இவற்றைப் பற்றிய போகரின் அறிவியல் சிந்தனைகள் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது..

**திறவுச்சொற்கள்:** குடை வித்தை - குளிகை - புகைரதம் - காயகற்பம் - வான்ரதம் - கெந்தர்வ வித்தை.

**முன்னுரை:**

சித்தர்கள் எந்த நிலையிலும் தன்நிலை மாறாமல், மனதை நிலைநிறுத்தி மௌனத்துடன், ஒரு சிந்தையின் தெளிவுடன் பல ஆண்டுகள் யோகப்பயிற்சியை மேற்கொண்டு தங்கள் ஆன்ம பலத்தை வலுப்படுத்தி மனோசக்தியால் எதையும் சாதிக்கும் திறன் பெற்று, தங்களுடைய மனதை தன்வசப்படுத்தி மிகவும் அடக்கமாக விளங்குவர். சித்தர்கள் யாவரும் மனித நேயம் மிகுந்தவர்கள். சாதி சமய வேறுபாடு அற்றவர்கள்' சமரச சன்மார்க்கத்தைப் போற்றுபவர்கள். போலி சடங்குகளையும், செயல்களையும், மூடநம்பிக்கைகளையும் கண்டிப்பவர்கள். அவர்கள், மனித வாழ்வு மிக உயர்ந்தது என்று கருதுகின்றனர். உடம்பைப் பேணிக் காக்கவேண்டும் என்று வற்புறுத்துகின்றனர். மனிதன் சிற்றின்பத்தில் மூழ்கிச் சீரழியக் கூடாது இளமை நிலை பெறாதது என்று இடித்துரைக்கின்றனர். இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு பல்லாயிரம் ஆண்டுகள் முன்னே பிறந்தவர் போகர் என்ற மாபெரும் சித்தர் .இவர் காளாங்கி நாதர் என்ற சித்தரின் சீடரும் 18 சித்தர்களில் ஒருவரும் ஆவார்.

**சித்தர் பரம்பரையும்; சிந்தனை வளமும்:**

தமிழில் காலந்தோறும் ஏற்பட்ட பதிவுகளில் சித்தர்களின் சிந்தனைப் பதிவும் குறிப்பிடத்தக்கது. சித்தர் இனம் நீண்ட நெடுங்காலமாக இந்த நிலத்தில் வேரூன்றி விழுது பரப்பி வருகிறது. 'மூலன் மரபில் வந்த நான் ஒரு சித்தன்" என பாரதி தன்னைச் சித்தர் பரம்பரையில் இணைத்துக் கொண்டு பெருமைப்படுத்துகிறார். பட்டினத்தாரும் தாயுமானவரும் வள்ளலாரும் சித்தர் தத்துவங்களைக் கோட்பாடுகளாக்கிக் கொடுத்தவர்கள் என்பதனை இலக்கிய வரலாறு இயம்பும்.

சித்தர் இலக்கியம் தமிழில் தனிவகை இலக்கியம், குறியீட்டு இலக்கியம், காலந்தோறும் வளர்ந்த இலக்கியம், தத்துவ இலக்கியம், இலக்கிய மதிப்பையும் இலக்கிய அந்தஸ்தையும் அறிஞர்களின் அங்கீகாரத்தையும் பெறாவிட்டாலும், சித்தர்களின் நுண்ணுணர்வு, ஆழ்நிலை எண்ணங்கள், வெடிப்புறு சிந்தனைகளில் வீசும் அலைகள் பொறி போலச் சுடர்விடுகின்றன. சித்தர் சிந்தனை வளமும் கருத்துக் கொடைகளும் எண்ணவிரிவுகளும் தவஞானியர்களின் சிந்தனை எச்சங்களாக மொழியைச் செழுமைப்படுத்தியுள்ளன.

**உலகெங்கும் சித்தர்கள்:**

சித்தர்கள் உலகமெங்கும் உள்ளனர். எல்லாக்காலங்களிலும், எல்லா இடங்களிலும் இருக்கின்றனர். அவர்கள், உலக மக்கள் அனைவர்க்கும் பொதுவானவர்கள். சாதி ,சமய வேறுபாடு அற்றவர்கள், நாடு, மொழி, இனம் ஆகிய குறுகிய எல்லையைக் கடந்தவர்கள். அவர்கள் எங்கும் எப்போதும் தோன்றி, மக்கள் இன்புற்று வாழ நல்வழி காட்டுகின்றனர். அவர்கள் ஆன்ம நேய ஒருமைப்பாட்டை-எம்மதமும் சம்மதம் என்ற சமரச சன்மார்க்கத்தை வளர்க்கின்றனர். “யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்பதே அவர்களின் குறிக்கோள். “ஒன்றே குலம் ஒருவனே தேவன” என்பதே அவர்களின் சமயக் கோட்பாடு. எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்றும் அறியாதவர்கள் அவர்கள்.

**போகர் சித்தர் :**

போகர்! சித்தர்கள் பற்றி சிந்திக்கும் பொழுது பாமரருக்கும் கூட பளிச்சென்று புலப்படும் ஒரு பெயர் இது! மருத்துவம், விஞ்ஞானம், மெய்ஞானம், ரசவாதம், காயகல்பமுறை, யோகாப்பியாசம் - என்று சகலத்திலும் உச்சம் தொட்ட ஒரு சித்தர் உண்டு என்றால் அவர் போகர் தான்.

**குளிகை என்னும் காற்றுக்கு கூண்டு:**

குளிகை என்பதனை இரு நிலைகளில் குறிப்பிடுவர் .ஒன்று மாத்திரை வடிவினது. அதனை

வாயில் அடக்கிக்கொண்டு பறப்பது. மற்றொன்று கூண்டு வகையினது. இதனுள் அமர்ந்து பறப்பது .போகர் இவ்விருநிலைகளிலும் பறந்ததைப் பல சான்றுகளால் அறியலாம். போகர் கூண்டுவகைக் குளிகையில் பறந்து சென்றதைப் பல பாடல்கள் குறிப்பிடுகின்றன. இதனை,

**செல்லலாம் யான் உரைத்த கூண்டினாலே**
**சிறப்புடனே தீவுக்குப் போகலாகும்.**

**சப்த காண்டம் (5:143_144)**

**குளிகையது யானும் கொண்டு**
**கூரான யானைமலை காண்பதற்கு**
**அண்டமுடன் ஆகாயம்தான் பறந்து**
**அழகான யானைமலை மீதில் சென்றேன்**

**சப்தகாண்டம் (5:154_157 )**

எனும் பாடல் வரிகளும் புலப்படுத்தும்.

**போகர் வடிவமைத்த கப்பல்:**

800 × 100 நீள அகலமுள்ள ஒரு சட்டத்தைப் பலகைகள் கொண்டு தயார் செய்து, வில்லாணி, கயிறு கொண்டு அடிப்பிடத்தை அமைத்து விட்டத்தையும் கால்களையும் கொண்டு முதலில்தொட்டிப் பகுதி அமைத்தும்,கப்பலின் இருபுறமும் சுக்காள்களை அமைத்து இரும்புச் சங்கிலியை மேல் வட்டம், கீழ் வட்டம் வழியாக மாட்ட வேண்டும். கீழ்த்தனம் ஒரு சுரங்கம் போன்றிருக்கும்.மேற்புறம் தொட்டி நீரைக் கொதிக்க விட்டு, நீர் கொதிநிலையடைந்ததும் ஆவியைக் குழல் வழியாகச் சுழலும்சக்கரத்தில் செலுத்திக் கப்பலை இயக்கலாம். மாடியின் மேல் இருந்து ஆணியை மாட்டினால் உடன்மரக்கலம் நின்று விடும். ஆவியின் தன்மைக் கேற்பக் கப்பல் வேகமாகச் செல்லும் .

**பீங்கான்:**

இன்று பீங்கானில் நாம் பயன்படுத்தும் கோப்பை, தட்டு, கிண்ணம், பூ ஜாடி, ஊறுகாய் ஜாடி, பொம்மைகள், குளியலறை உபகரணங்கள் என்று அனைத்தையும் இவ்வுலகிற்கு முதன்முதலில் வழங்கியது போகர் சித்தர் எனலாம்.

**“நாட்டலாம் சீனபதி நடுமையத்தில்**
**நலமான பூநீறு விபரஞ் சொல்வோம்**
**நோட்டமுடன் பூநீராம் மண்ணையப்பா**
**நுணுக்கமுடன் தானெடுத்துக் காய்ச்சும்போது**

**தாட்டிகமா யுவர்மண்ணு சுண்ணாம்பாலே**
**தளிருடனே பிசைகிக்கு களிப்புண்டாகும்**
**வாட்டமுடன் குயவனார் பாண்ட மொய்யாய்**
**வளமையுடன் தான் வகுக்க வளமைகேளே"**

**சப்தகாண்டம், பா.எண்: 2370**

உவர்மண், சுண்ணாம்பு இவற்றைக்கொண்டு பீங்கான் தயாரிப்பு முறையை உலகிற்கு பயன்பெறும் வண்ணம் வழங்கியுள்ளார் போகர் .தாம் செய்யும் காயகற்பம் சட்டங்களில் மூலிகைகளை நசுக்கும்போதும், பஸ்பங்களைச் செய்யும்போதும் பீங்கான் பொருட்களைப் பயன்படுத்துவது பற்றியும் கூறியுள்ளார்.

**புகை ரதம் அல்லது தரையில் நீராவியால் ஓடும் வண்டி :**

போகர் பாடல்களில் புகைரதம், சித்திரரதம் என்னும் இரு வாகனங்கள் குறிக்கப்பட்டுள்ளன. தரையில் நீராவியால் ஓடும் வண்டியைப் புகைரதம் என்றும்இ வானில் பறக்கும் புட்பக விமானம் போன்ற அமைப்புடையதைச் சித்திரரதம் என்றும் குறிப்பிடுவர். இப்புகைரதத்தினைச் சீனர்களுக்காக வடிவமைத்ததாகக் கூறும் அவர் அதனைத் தயாரித்த முறையையும் வெளிப்படுத்துவார்.

**"பிரமமாம் பிரமமென்பார் போதமென்பார்**
**பிரகாச சுத்தவெளி சாரவென்பார்**
**நிர்மலமாம் வேறொன்றிலாத நிற்குணந்தான்**
**நிர்மலமாங்கடந்துநின்ற வேதாந்தமென்பார்**
**விபரமாம்பிரபஞ்சமெல்லாம் விளைந்ததென்பார்**
**வெளியாக நிற்மயமாய் நிறைந்ததென்பார் வர்மமாம் கடந்த வழி**
**வெளிதானென்பார் வாய்ப்பேச்சே அல்லாமல் வரைகாணாரே"**

**சப்தகாண்டம் ( 3:203 -_206 )**

புகை ரதம் வடிவமைக்கும் முறையை பற்றித் தெளிவாக்குவதால் கி.பி. 1698க்கு முன்பே சீனாவிலும் புகைரதம் வடிவமைக்கும் முயற்சி நடந்துள்ளமை புலப்படுகின்றது.

**நீராவிக்கப்பல்:**

போகர் நீராவிக் கப்பலைக் கட்டி அதில் பலரை ஏற்றிச் சென்றதைத் தம் பாடல்களில் குறிப்பிடுகிறார். நாவாய், பெருங்கலம். புணை, தோணி, அம்பு என்னும் பல சொற்கள் சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப் பெற்றுள்ளன. இவையனைத்தும் பாய்மரங்களால் ஆனவை

பொறிகளால் இலங்கியவை அல்ல.

**கண்ணாடி :**

உடலினை அலங்கரித்துக் கொள்ள பயன்படும் கண்ணாடியினை தயாரித்துக் கொடுத்த போகர் இதனைச் செய்யும் முறையினை விரிவாக வழங்கியுள்ளார்.

**“மார்க்கமுடன் கண்ணாடி காய்ச்சி விட்டேன்**
**மயங்காமல் பூநீரைக் கண்டறிந்தேன்**
**தீர்த்தமுடன் வட்டவெளி சேமித்தேன்யான்**
**திறமுடனேபளிங்குயென்ற வட்டஞ்செய்தேன்**
**வார்க்கமுடன் கருக்கட்டி வளவுசெய்தேன்**
**வளமுடனே சூதமுடன் உளவு கண்டேன்**
**பார்க்கையிலே சூதமென்ற கிணறுகண்டேன்**
**பாகமுடன் கண்ணாடிக் கேற்றலாச்சே”**

**-சப்த காண்டம் - 2380**

போகர் மண்ணைக் கொண்டு காய்ச்சியபின் அதன் பளபளக்கும் பாகை சட்டங்களில் ஊற்றி கண்ணாடி செய்ததாகவும் இதில் பாதாசம் தாக்கிய ஈயத்தை காய்ச்சி பூசி தந்ததும் இது முகத்தைக் காட்டும் ஆடி ஆனது என்று கூறுகிறார் போகர். இதனையே “பிளைன் கிளாஸ்" என்று ஆங்கிலத்தில் கூறுகின்றோம். இதில் போகர் கனிமவளம் பற்றிய நுட்பங்களை அறிந்திருந்தார் என்பது புலனாகிறது.

**முடிவுரை:**

சித்தர் சிந்தனை எப்போது தோன்றியது எவ்வாறு வளர்ந்தது ஓங்கியது என்று எவராலும் கூற முடியவில்லை. சித்தர்பாடல்களால் செந்தமிழ் செழுமை பெற்றுள்ளது. கருத்துக் கெட்டாத சிந்தனைகளையும் அவர்கள் பாடல்களில் சொல்ல முயன்றுள்ள திறம்கற்று இன்புறத்தக்கது. சித்தர்களின் வாழ்க்கை வரலாற்றின் சுவடுகளைக்கூட அறிய முடியவில்லை. சித்தர்கள் தம்மை உயர்த்திக் கொண்டதோடு உலக மக்களையும் உயர்த்துவதற்கு உதவினார்கள்.

பல அறிவியல் கூறுகளின் வாயிலாக அரிய படைப்புகளை வழங்கியுள்ள சித்தர்பெருமான் போகர் ஆவார். தமது அறிவியலின் சிந்தனை துளிகளை தனது போகர் சப்தகாண்டம் என்ற நன்னூலினை வழங்கி அவரது அறிவியல் படைப்புகளுக்கான சான்றாக அனைத்தும் பயன்பெறும் வண்ணம் இனிதே வழங்கியுள்ளார் போகர். போகர் அருளிய அறிவியல் சிந்தனையில் பெரும் பிரபஞ்சரகசியங்களும், மக்களுக்கு பயன்படும் உபகரணங்களும் உள்ளன

என்பது திண்ணம்.

**துணைநூற்பட்டியல்:**


1. போகர் சத்தகாண்டம் 7000 - சுந்தசாமி முதலியாரவர்கள் பதிப்பித்த பிரதிக்கிணங்க, சென்னை.
2. சுகுமாரன் (ப.ஆ.) - போகரின் சத்தகாண்டம் -7000
3. உமா சம்பத் - சித்தமெல்லாம் சிவமயம், பத்ரி சேஷாத்திரி, மதுரை.
4. கணபதி, டி.என். - தமிழ்ச் சித்தர் மரபு, ரவி பப்ளிகேஷன்ஸ், சென்னை - 83, ஆறாம் பதிப்பு, 2015
5. இராமச்சந்திரன், எஸ்.பி. - போகர் ஞான சூத்திரம் 100 முதலிய நூல்கள். தாமரை நூலகம், சென்னை – 26, நான்காம் பதிப்பு. 2017.
6. சித்தர் பாடல்கள் பட்டினத்தார் முதல் பாரதியார் வரை - பாவை பப்ளிகேஷன்ஸ் 142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014.
7. சித்தர் பாடல்கள் - பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக்குளம். மேற்கு வீதி, மயிலாப்பூர், சென்னை-600 004
8. இராமச்சந்திரன், எஸ்.பி. - போகமுனிவர் வைத்திய காவியம், தாமரை நூலகம், சென்னை, 26, நான்காம் பதிப்பு, ஆகஸ்டு 2015.